මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, අංක.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

LAE\2023\ 35

2023.02.12

# உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் 2023

## வாக்காளர்களினால் வாக்கெடுப்பு நிலையத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டுமென்பதற்காக செய்யப்படுகின்ற அறிவித்தல்

2023.03.09 ஆம் திகதி நடாத்தப்படவுள்ள உள்;ர் அதிகார சபைகள் தேர்தலின் போது வாக்காளர்கள் தமது ஆளடையாளத்தை நிருப்பித்தல் வேண்டும். அதற்காக கீழ்க் காணும் ஆளடையாள ஆவணங்கள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.

1. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை;
2. செல்லுபடியான கடவுச் சீட்டு;
3. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்;
4. அரசாங்க சேவை ஓய்வூதிய அடையாள அட்டை;
5. முதியோர் அடையாள அட்டை;
6. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ள மதகுருமார்களுக்கான அடையாள அட்டை;
7. தேசிய அடையாள அட்டையின் தகவல்களை உறுதிப்படுத்தும் கடிதம்;
8. சாரதி அனுமதிப்பத்திரத்துக்காக விண்ணப்பித்துள்ளவர்களுக்கும், சாரதி அனுமதிப் பத்திரத்தைப் புதுப்பிப்பதற்காக விண்ணப்பித்துள்ளவர்களுக்கும் மோட்டார் வாகனத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரம்;
9. தேர்தல் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட விஷேட அடையாள அட்டை.

02. மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் தவிர்ந்த வேறு எந்தவோர் ஆவணமும் அதாவது வேறு அடையாள அட்டைகள், அத்தாட்சிப்படுத்தப்பட்ட புகைப்படங்கள் அல்லது தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பப்பத்திரங்களை கையேற்கும் போது வழங்கப்படும் பற்றுச்சீட்டுக்கள் போன்ற எந்தவோர் ஆவணமும் வாக்குச் சீட்டொன்றை விநியோகிக்கப்படுவதற்காக செல்லுபடியான அடையாள அட்டையொன்றாக வாக்கெடுப்பு நிலையத்தில் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

03. வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்காளரொருவரின் ஆளடையாளத்தை நிருப்பிப்பதற்காக மேலே 1 - 9 வரையான அடையாள அட்டைகளில் எதுவும் இல்லாத அல்லது இருக்கும் அடையாள அட்டைகள் நிறம் மாறியமையால், தெளிவற்றதாக அல்லது நபரை அடையாள அட்டையில் இனம் கண்டு கொள்ள முடியாத வகையில் இருப்பின் அவ்வாறான வாக்காளர்கள் தேர்தல் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்படுகின்ற விசேட அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

04. தேர்தல் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்படுகின்ற விசேட அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2023.03.02 ஆம் திகதி ஆகும். எனவே தற்காலிக அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின், உடனடியாக அடையாள அட்டை தேவைப்படும் நபர் 2 ½ செ.மீ. அகலம், 3 செ.மீ. உயரம் (1¼ஓ1 அங்குலம்) அளவுடைய (தேசிய அடையாள அட்டையின் அளவு) தனது மேலுடம்பின் கறுப்பு வெள்ளை அல்லது வர்ண புகைப்படங்கள் இரண்டுடன் பிரதேசத்தின் கிராம அலுவலரை அல்லது தோட்டமொன்றை வசிப்பிடமாகக் கொண்டிருப்பின் தோட்ட அத்தியட்சகரை சந்தித்தல் வேண்டும்.

05. விசேட அடையாள அட்டை விண்ணப்பப் படிவங்களைக் கிராம அலுவலரிடம்/ தோட்ட அத்தியட்சகரிடம் பெற்றுக் கொள்ள முடியுமென்பதோடு, அந்த விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து இரண்டு புகைப்படங்கள் சகிதம் கிராம அலுவலர் ∴ தோட்ட அத்தியட்சகரிடம் கையளித்தல் வேண்டும். அவர்கள் மூலம் வாக்கெடுப்புத் தினத்திற்கு முன்னர் உரிய வாக்காளர்களுக்கு அடையாள அட்டைகள் கையளிக்கப்படும்.

தேர்தல் ஆணைக்குழுவின் ஆணைப்படி,

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்